# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.11.15 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## அற்றோணித் தத்துவம் (திருத்தம்)

*(122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச்சட்டத்தைத்*
*திருத்துவதற்கானதொரு சட்டமூலம்*

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்*
*பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

**விலை: ரூபா 09.00** **தபாற்செலவு : ரூபா 50.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு வெளிநாட்டு அற்றோணித் தத்துவத்தைத் கையொப்பமிடுவதற்காகப் புதியவொரு நடவடிக்கைமுறையை அறிமுகப்படுத்துவதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவின் சிங்கள உரையைத் திருத்துவதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவின் நோக்கெல்லையை விசாலிப்பதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II இனை மாற்றீடுசெய்வதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது அட்டவணை II இன் நோக்கெல்லையை விசாலிப்பதாகும்.

**வாசகம் 6:** இவ்வாசகம், முன்னர் பதிவுசெய்யப்பட்டிராத அற்றோணித் தத்துவத்தின் பதிவுக்காலப்பகுதியை நீடிப்பதாகும்.

*ச.வ.-ஓ. 26/2023*

**(122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம் 2023 ஆம் ஆண்டின் ......ஆம் இலக்க, அற்றோணித் தத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

122 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் "அற்றோணித் தத்துவம்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் பந்தியில், "இரண்டு சாட்சிகளினதும் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட தூதுவரின்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட தூதுவரின்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவு, "நிறைவேற்றலாகாது.". என்னும் சொல்லுக்குப் பதிலாக "நிறைவேற்றலாகாது." என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆ) விடயத்துக்கேற்ப, அந்த அற்றோணித் தத்துவத்தைக் கைமீட்கின்ற அல்லது

இல்லாதொழிக்கின்ற அவரது உட்கருத்தை வெளிப்படுத்தி அல்லது அந்த அற்றோணித் தத்துவத்தின் கீழ் செயலாற்றாதிருப்பதற்கு அவரது உட்கருத்தைத் தெரிவித்து, ஆவணமொன்று –

(i) இரண்டு சாட்சிகளின் முன்னிலையிலும் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டும் இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படின்; அல்லது

(ii) 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு தூதுவரின், ஓர் உயர்ஸ்தானிகரின், அல்லது ஒரு தூதாண்மை அலுவலரின் அல்லது காவற்றூதுவரின் அல்லது அந்நாட்டின் சட்டத்திற்கிணங்க அற்றோணித் தத்துவமொன்றை அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்ற ஓர் ஆளின் முன்னிலையில் இலங்கைக்கு வெளியே எழுதிநிறைவேற்றப்படின்,

அதனை எழுதிநிறைவேற்றியவராதல் வேண்டும்; அத்துடன்”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II இனை மாற்றீடு செய்தல்

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை II இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

(பிரிவுகள் 3(3) மற்றும் 5)

அட்டவணை II

| | | |
|---|---|---|
| 1. | தொடரில. | |
| 2. | பதிவுத் தேதி | |
| 3. | அற்றோணித் தத்துவத்தின் விவரணம் | |
| 4. | அளிப்பவரின் பெயரும் முகவரியும் | |
| 5. | அற்றோணியின் பெயரும் முகவரியும் | |
| 6. | அற்றோணித் தத்துவத்தின் தேதி | |
| 7. | பதிவுசெய்யப்படுவதற்காக எவ்வாளினால் அற்றோணித் தத்துவம் சமர்ப்பிக்கப்படுகின்றது | |

| | | |
|---|---|---|
| 8. | அற்றோணித் தத்துவத்தின் உண்மைப்பிரதி கோப்பிடப்படுமிடத்து, தொகுதியும் இருமடித்தாளும் | |
| 9. | கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் ஆவணத்தின் தேதியும் இலக்கமும் | |
| 10. | கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் ஆவணம் எவரினால் கொடுக்கப்பட்டது | |
| 11. | கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் ஆவணம் பதிவுசெய்யப்பட்ட தேதி | |
| 12. | கைமீட்டல் அல்லது இல்லாதொழித்தல் ஆவணம் பதிவுசெய்யப்பட்ட தொகுதியும் இருமடித்தாளும் | |

செல்லுபடியாக்குதல்

6. இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, அற்றோணித் தத்துவ (திருத்தச்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினதும், (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் 25 ஆந் தேதிக்கு முன்னர் எழுதிநிறைவேற்றப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பதிவுசெய்யப்பட்டிராததுமான ஒவ்வோர் அற்றோணித் தத்துவமும், 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் 25 ஆந் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய இரண்டாண்டுக் காலப்பகுதியினுள் பதிவாளர் தலைமையதிபதிக்குப் பதிவுசெய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) அவ்வுட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பதிவுசெய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படாத ஒவ்வோர் அற்றோணித் தத்துவமும், அக்காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயனுறுவதாக, வெற்றானதும் வறிதானதுமாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.